
### பழங்குடி மக்களின் வாழ்வாதார முன்னேற்றம்—

# சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுமா?

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 29-

தமிழகத்தில் சூழலியல் சுற்றுலா (EcoTourism) மேம்பாடு, இயற்கை வளப் பாதுகாப்பு, பழங்குடியின மக்களின் வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் மக்களவையில் கேள்வி எழுப்பினர்.



தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சூழலியல் சுற்றுலா திட்டங்களின் தற்போதைய நிலை என்ன, கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை வனச்சரகத்திற்கு உட்பட்ட பரளிக்காடு (Baralikadu) சூழலியல் சுற்றுலா திட்டத்தின் முன்னேற்றம் என்ன, பழங்குடியின மக்களின் பங்களிப்புடன் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் திட்டங்கள் என்னென்ன, சுற்றுலா மையங்களில் பார்வையாளர்களுக்கான வசதிகள், விளக்க மையங்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், உள்ளூர் மக்களின் பங்கேற்பு மற்றும் 2020-21 முதல் 2025-26 வரை ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள் என்ன என்பன உள்ளிட்ட பல்வேறு முக்கிய கேள்விகளை எழுப்பியிருந்தார். மேலும், இத்திட்டங்களின் மூலம் சுற்றுலாப் பயணிகள் வருகை, வேலைவாய்ப்பு உருவாக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் உள்ளூர் மக்களுக்கு கிடைத்த பொருளாதாரப் பலன்கள் குறித்தும் கதிர் ஆனந்த் விளக்கம் கோரியிருந்தார்.

இதற்கு, ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

ஒன்றிய அரசு, சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவது மாநில அரசுகளின் பொறுப்பாக இருந்தாலும், ஒன்றிய சுற்றுலாத்துறை சுவதேஷ் தர்ஷன் (Swadesh Darshan), பிரசாத் (PRASHAD) மற்றும் மத்திய முகமைகளுக்கான சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் மாநிலங்களுக்கு நிதி உதவி வழங்கி வருவதாக தெரிவித்துள்ளது. மாநில அரசுகளிடமிருந்து பெறப்படும் விரிவான திட்ட அறிக்கைகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், Swadesh Darshan 2.0 திட்டத்தின் கீழ் Challenge Based Destination Development என்ற துணைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சுற்றுலாத் தலங்களை நிலையான மற்றும் பொறுப்புமிக்க சுற்றுலா மையங்களாக மாற்றுவதே இதன் நோக்கம் என்றும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. சுற்றுலா உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, சுகாதார வசதிகள், கடைசி மைல் சாலை இணைப்பு, வாகன நிறுத்தம், சுற்றுலா சேவைகள் மற்றும் பொதுவான தள மேம்பாட்டுப் பணிகளுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பிரதமர் ஜனஜாதிய உன்னத் கிராம் அபியான் (PM JUGA) திட்டத்தின் கீழ் பழங்குடியினர் பகுதிகளில் ஹோம்ஸ்டே (Homestay) வசதிகளை உருவாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ.5 லட்சம் வரை, புதிய அறைகள் அமைப்பதற்கு குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் வரை, ஏற்கனவே உள்ள அறைகளைப் புதுப்பிப்பதற்கு ரூ.3 லட்சம் வரை உதவி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹோம்ஸ்டே உரிமையாளர்களுக்கு தொழில் நுட்ப மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படும் என்று ஒன்றிய அரசு விளக்கியுள்ளது.

சுற்றுலாத்துறையில் திறன் மேம்பாடு, உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஆகிய வற்றை மேம்படுத்த பர்யடன் மித்ரா, பர்யடன் தீதி, ஹுனர் சே ரோஜ்கார் தக் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், நாட்டில் நிலையான சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் தேசிய சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் நிலையான சுற்றுலா உத்திகள் மற்றும் Travel for LiFE திட்டங்களும் நடைமுறையில் உள்ளதாகவும் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஒன்றிய அரசின் பல்வேறு சுற்றுலா திட்டங்களின் கீழ் இது வரை ரூ.390.74 கோடி மதிப்பிலான திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் சென்னை-மாமல்லபுரம்-இராமேஸ்வரம்-மணப்பாடு-கன்னியாகுமரி சுற்றுலா வழித்தட மேம்பாட்டிற்கு ரூ.73.13 கோடி, மாமல்லபுரம் கடற்கரை கோயில் சுற்றுலா அனுபவ மேம்பாட்டிற்கு ரூ.30.02 கோடி, இராமேஸ்வரம் ஆன்மிக சுற்றுலா மைய மேம்பாட்டிற்கு ரூ.20.01 கோடி, காஞ்சிபுரம், வேளாங்கண்ணி மற்றும் 8 நவகிரக கோயில்கள் மேம்பாட்டிற்கு ரூ.59.79 கோடி, நந்தவனம் பாரம்பரிய பூங்கா மற்றும் ஊட்டி சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்கு ரூ.169.90 கோடி, சென்னை துறைமுகம், கங்கைகொண்ட சோழபுரம், இராமேஸ்வரம் மற்றும் மதுரை ரயில் நிலையங்களில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்த ரூ.37.89 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தனது பதிலில் கூறி யுள்ளார்.

### பாதசாரிகளுக்கான வசதிகள் — மிதிவண்டிப் பயன்பாட்டை அதிகரிக்கவும்

# சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் ஒன்றிய அரசால் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் — எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 29-

பாதசாரிகளுக்கான வசதிகள் பெருக்கவும், மிதிவண்டி பயன்பாட்டை அதிகரிக்கவும், சுற்றுச் சூழலை மேம்படுத்தவும் உரிய முயற்சிகளில் ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டுள்ளதா? என்று மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பினார்.

திராவிடமுன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 27 ஜுலை 2026 அன்று மாநிலங்களவையில் பாதசாரிகளுக்கான வசதிகள் பெருக்கவும், மிதிவண்டி பயன்பாட்டை அதிகரிக்கவும், சுற்றுச் சூழலை மேம்படுத்தவும், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ஒன்றிய அரசு, ஏதேனும் முயற்சிகளை எடுத்துள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் நகர்புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் மோகன் சாகு அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நகர்புற வளர்ச்சித துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:



அரசிலமைப்பு சட்டத்தின்படி உள்ளாட்சி சார்ந்த சாலைகள், பாலங்கள் அனைத்தும் மாநில அரசின் பட்டியலில் இருப்பதால் உள்ளாட்சி அமைப்புகள், நகராட்சிகளே உரிய முயற்சி எடுக்க வேண்டும் என்றும், ஆனால் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கத் தேவையான கொள்கை முடிவுகள், விதிகள் ஆகியற்றை ஒன்றிய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கும் அவ்வப்போது வழங்கி வருகிறது என்றும், தேசிய நகரப் போக்குவரத்து கொள்கை, மெட்ரோ தொடர் வண்டி கொள்கை ஆகியவற்றின்படி பாதசாரிகளுக்கும், மிதிவண்டி உபயோகப்பவர்களுக்கும் தேவையான வசதி செய்து தர ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும், அடல் மிஷன் எனப்படும் அம்ருத் திட்டத்தின்படி 500 நகரங்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் ஒன்றிய அரசால் அளிக்கப்பட்டுள்ளது என்றும், இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தேசிய நகர வாழ்வாதார திட்டத்தின் கீழ் 2958 திட்டங்களின் வழி சுமார் 8 இலட்சம் மரக்கணிகள் நடப்பட்டுள்ளன என்றும், இதன் மூலம் சுற்றுச் சூழல் மேம்பட ஆவன செய்யப்பட்டுள்ளது என்றும், 100க்கும் மேற்பட்ட நகரங்களில் 10000க்கும் அதிகமான மின்சாரப் பேருந்துளை இயக்கி சுற்றுச் சூழல் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் ஒன்றியு அரசு எடுத்துள்ளது என்றும் ஒன்றிய அரசின் நகர்புற வளர்ச்சித துறை இணையமைச்சர் அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### திருவள்ளூர் அடுத்த பேரம்பாக்கம் அரசு மருத்துவமனையில்

# ஸ்ட்ரச்சருக்கு பதில் மரப்பலகையில் நோயாளி!

## த.வெ.க. அரசின் அலட்சியத்தால் மருத்துவ துறை சீர்குலைகிறது என நோயாளிகள் — பொதுமக்கள் குற்றச்சாட்டு!

திருவள்ளூர், ஜுலை 29;-

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பேரம்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், அவசர சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்ட நோயாளியை ஸ்ட்ரச்சர் இல்லாததால் மரப்பலகையில் படுக்க வைத்து சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்துச் சென்றதாக கூறப்படும் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

தகவலின்படி, விபத்தில் காயமடைந்த ஒருவரை சிகிச்சைக்காக பேரம்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் கொண்டு வந்துள்ளனர். அப்போது, நோயாளியை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய ஸ்ட்ரச்சர் மருத்துவமனையில் இல்லாததால், மரப்பலகையை பயன்படுத்தி மருத்துவப் பணியாளர்கள் நோயாளியை எடுத்துச் சென்றதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பான தகவல்கள் சமூக வலைதளங்களில் பரவி, அரசு மருத்துவமனைகளின் அடிப்படை வசதிகள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

சுமார் ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்பட்டதாக கூறப்படும் இந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், போதுமான மருத்துவ உபகரணங்கள், அவசர சிகிச்சை வசதிகள் மற்றும் அடிப்படை கட்டமைப்புகள் இல்லாதது வேதனையளிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, உயிர் காக்கும் சிகிச்சை வழங்கப்படும் மருத்துவமனையில் ஸ்ட்ரச்சர் போன்ற அத்தியாவசிய மருத்துவ உபகரணம் கூட இல்லாத நிலை மிகவும் கவலைக்குரியது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தமிழக அரசை கடுமையாக விமர்சித்துள்ளனர். , "தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மருத்துவத் துறையில் இந்திய அளவில் முன்னோடி மாநிலமாகப் பாராட்டப்பட்ட தமிழ்நாடு, தற்போது த.வெ.க. ஆட்சியில் அடிப்படை மருத்துவ வசதிகள் கூட பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது" என்று குற்றம்சாட்டியுள்ளனர்.

மேலும், "மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்துவதாக அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. ஆனால், கிராமப்புற அரசு மருத்துவமனைகளில் ஸ்டெச்சர் போன்ற அத்தியாவசிய உபகரணங்கள்கூட இல்லாத நிலை, அரசின் நிர்வாகத் தோல்வியை வெளிப்படுத்துகிறது. மக்களின் உயிர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய மருத்துவத் துறை, இன்று அலட்சியத்தின் பிடியில் சிக்கியுள்ளது" என்றும் எதிர்க் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், "மருத்துவத் துறையில் தமிழ்நாடு பெற்றிருந்த நற்பெயரை மீட்டெடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் போதுமான மருத்துவப் பணியாளர்கள் உள்ளனவா என்பதை ஆய்வு செய்து, குறைபாடுகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும்" என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பேரம்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் இந்தச் சம்பவம் குறித்து அதிகாரப்பூர்வ விசாரணை நடத்தி, உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும் என்றும், மருத்துவமனையில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மேகதாது அணை கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும்!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜுலை 29-

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், விதி 377ன் கீழ் கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்தை உடனடியாக நிறுத்த மத்திய அரசு தலையிட வேண்டும் என்றும், காவிரி நீர் பங்கீட்டு விவகாரத்தைத் தீர்ப்பதற்காக தனி தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்றும் மக்களவையில் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் பேசியதாவது:-

கர்நாடகா மற்றும் தமிழ்நாடு இடையேயான நீண்டகால மாநிலங்களுக்கு இடையேயான நீர்விவகாரமாக மேகதாது அணைத் திட்டம் இருந்து வருகிறது. காவிரி மற்றும் அர்காவதி ஆறுகள் சங்கமிக்கும் பகுதியில் ரூ.9,000 கோடி மதிப்பில் கர்நாடக அரசு மேகதாது அணைத் திட்டத்தை முன்னெடுத்து வருவது மிகவும் வருத்தமளிப்பதுடன், தமிழ்நாட்டின் நலனுக்கு எதிரானதாகும்.



காவிரியின் கீழ்படுகை மாநிலமான தமிழ்நாடு, இந்தத் திட்டத்தை தீவிரமாக எதிர்த்து வருகிறது. இந்த அணை கட்டப்பட்டால், கீழ்நோக்கி செல்லும் நீரின் அளவு கடுமையாகக் குறைவதுடன், காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் என்ற அச்சம் நிலவுகிறது.

மேகதாது அணைத் திட்டம், 2007ஆம் ஆண்டு தீர்ப்பாயத்தின் இறுதி உத்தரவையும், 2018ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் மீறுவதாகும். காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியிலுள்ள அனைத்து மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் புதிய கட்டமைப்புகளை உருவாக்க முடியாது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேகதாது திட்டத்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கக் கூடாது என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப்பேரவை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதையும் அவர் நினைவூட்டினார்.

மேலும், தி.மு.க. சார்பில் மேகதாது விவகாரத்தைத் தீர்க்க தனி தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்ற திருத்தத் தீர்மானமும் முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், முன்னாள் முதலமைச்சர் தலைமையிலான தி.மு.க. தொடர்ந்து இந்தத் திட்டத்தை எதிர்த்து வருவதாக தெரிவித்தார்.

எனவே, கர்நாடகாவின் மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கையை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமும், காவிரி நீர் மேலாண்மை ஆணையமும் நிராகரித்து திருப்பி அனுப்ப வேண்டும் என்றும், தமிழ்நாட்டுக்குரிய காவிரி நீரை உரிய அளவில் உறுதி செய்யவும், மேகதாது அணை தொடர்பான அனைத்து கட்டுமானப் பணிகளையும் கர்நாடக அரசு உடனடியாக நிறுத்த மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என்றும் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.

### சோளிங்கர் — த.வெ.க எம்.எல்.ஏ. தலைமையில் 20 பேர் கொண்ட கும்பல்

# பத்திரிகையாளர்களை அறையில் அடைத்து வைத்து கொலைவெறித் தாக்குதல்!

## நடவடிக்கை எடுக்கக் கோரி உறவினர்கள் — பொதுமக்கள் சாலை மறியல்!

வேலூர், ஜுலை, 29-

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் தினகரன், தினமலர் நிருபர்களை அறையில் அடைத்து வைத்து கொலைவெறி தாக்குதல் நடத்திய சோளிங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் 20க்கும் மேற்பட்ட கும்பல் மீது நடவடிக்கை எடுக்க கோரி உறவினர்கள், பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் ஒரு தியேட்டரில் சில நாட்களுக்கு முன்பு ஜனநாயகன் திரைப்படம் வெளியானது. இந்த திரைப்படத்தை சோளிங்கர் எம்எல்ஏ கபில் தியேட்டரில் பார்த்துவிட்டு வெளியே வந்துள்ளார். அப்போது யூடியூபர் சிவா என்பவர் அங்கே இருந்துள்ளார். உடனே த.வெ.க. எம்.எல்.ஏ. கபில் அந்த யூ. டியூபரை தாக்க முயன்றுள்ளார் அது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது. மேலும் இது குறித்த செய்தி டி.வி.களில் ஒளிபரப்பானது.

இதனால் எம்.எல்.ஏ. கபில் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஆத்திரமடைந்து அந்த யூ டியூபர் சிவாவை தேடி வந்துள்ளனர். தொடர்ந்து படத்தை தியேட்டருக்கு சென்று சி.சி.டி.வி. கேமரா பதிவுகளை ஆய்வு செய்துள்ளனர். அப்போது நிருபர்கள் யூடியூபர் மற்றும் யார் யார் வந்தார்கள் என்பது குறித்து ஆய்வு செய்துள்ளார்.

இந்நிலையில் சோளிங்கர் அண்ணா சிலை அருகே உள்ள யூ டியூபரின் வீட்டிற்கு எம்.எல்.ஏ. கபில் மற்றும் அவரது தம்பி தனஞ்செழியன் மற்றும் 20க்கும் மேற்பட்டவர்கள் அங்கு சென்றுள்ளனர். அப்போது அவர் குளித்து கொண்டு இருந்துள்ளார் குளித்து முடித்தவுடன் வெளியே வந்த சிவாவை வலுக்கட்டாயமாக அருகில் உள்ள யூடியூபரின் ஸ்டுடியோ கடைக்கு அழைத்துச் சென்று சரமாரியாக தாக்கி உள்ளனர்.

இதற்கு இடையே சம்பவம் குறித்து அறிந்த அப்பகுதி பொதுமக்கள் கடையின் வெளியே குவிந்தனர். கடையின் வெளியே நடந்த சம்பவங்களை நிருபர்கள் ரங்கநாதன், கல்யாணசுந்தரம் ஆகியோர் செல்போனில் வீடியோ பதிவு செய்து கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்த கபில், அவர் தம்பி தனஞ்செழியன் மற்றும் 20க்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் ஆவேசத்துடன் அரங்கநாதன் மற்றும் கல்யாணசுந்தரம் இருவரையும் சுற்றி வளைத்து பிடித்து அந்த கடையில் உள்ளே தள்ளி கதவை மூடி உள்ளே வைத்து சரமாரியாக தாக்கி உள்ளனர். மேலும் செல்போன்களை பறித்துக் கொண்டு பதிவு செய்த வீடியோக்களை அழிக்குமாறு கூறியுள்ளனர்.

இவர்களின் சத்தம் கேட்டதும் அங்கிருந்த பொதுமக்கள் கடையின் முன்பு குவிந்து கூச்சலிட்டனர். தகவல் அறிந்த சோளிங்கர், போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர் காவல் அதிகாரி எம்.எல்.ஏ. கபில் போன் செய்து வரவழைத்தார். அப்போது நிருபர்கள் அரங்கநாதன் தினமலர் நிருபர் கல்யாணசுந்தரம் ஆகியோர் பதிவு செய்த வீடியோக்களை எஸ்.ஐ. முன்னிலையில் எம்.எல்.ஏ. கபில் அவரது தம்பி தனஞ்செழியன் ஆகியோர் அழித்துள்ளனர். தொடர்ந்து அவர்களை த.வெ.க.வின் எம்.எல்.ஏ. மற்றும் அக்கட்சியினர் அந்த நிருபர்களை கடுமையாக தாக்கிவிட்டு காரில் தப்பி சென்றனர். தாக்குதலில் பலத்த காயடைந்த அரங்கநாதன், கல்யாணசுந்தரம், சிவா ஆகிய மூன்று பேரையும் அங்கிருந்த பொதுமக்கள் மீட்டு சோளிங்கர் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு அவர்களுக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்கு வேலூர்தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இதற்கு இடையில் இந்த தாக்குதல் சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சி அடைந்த உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தாக்கு நடத்திவிட்டு தப்பி ஓடிய எம்.எல்.ஏ. மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும் என்று கூறி போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் தாக்குதலில் காயம்அடைந்த இந்த மூன்று பேரும் சோளிங்கர் போலீசில் தனித்தனியாக புகார் மனு அளித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ. அண்ணாதுரை

### ஜுலை 29 (2014)



வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆறு முறையும் – திருப்பத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக இரண்டு முறையும், மாடப் பள்ளி கூட்டுறவு சேவை சங்கத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது கைது செய்யப்பட்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர். மொழிப் போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.